Deposition of witness
(Chapter XXIII Code of Criminal Procedure
District Munsif cum Judicial Magistrate Court, Alangudi.
CC No. 240 /2018

**Deposition of P.W.1**

| | | |
|---|---|---|
| Name | : | கரோசியாலோபெர்னான்டஸ் |
| Father's Name | : | இஸ்தாகீர் |
| Village | : | கீழாத்தூர் புதுகுடியிருப்பு |
| Religion | : | கிறிஸ்டியன் |
| Age | : | **40/2024** |

**Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 28.02.2024**
(1,2,3 எதிரிகள் நீதிமன்றத்தில்ஆஜர் இல்லை. வழக்கறிஞர் ஆஜர். எதிரிகள் தரப்பில் குவிமுச பிரிவு 317 ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனு அனுமதிக்கப்பட்டது )

<u>**முதல் விசாரணை**</u>

நான் கீழாத்தூர் புதுகுடியிருப்பு கிராமத்தில் வசித்து ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறேன். எங்களுக்கு சொந்தமான பூர்வீக இடம் கீழாத்தூர் புதுகுடியிருப்பு கிராமத்தில் எங்களது வீட்டிற்கு அருகில் உள்ளது. எனது பூர்வீக இடத்திற்கு அருகில் எதிரி ஆரோக்கியசாமியின் இடம் உள்ளது. 08.09.2017 அன்று சுமார் காலை 11 மணியளவில் நான் என் வீட்டில் இருந்தபோது எதிரிகள் ஆரோக்கியசாமி, ஆரோக்கியமேரி, இன்னாசிபாஸ்கர் ஆகியோர் மூவரும் சேர்ந்து எங்கள் இடத்திற்கும் அவர்கள் இடத்திற்கும் மத்தியில் உள்ள பொதுவரப்பினை அழித்து உழுதார்கள். வண்டி உழும் சத்தம் கேட்டு நான் சென்று பார்த்து ஆரோக்கியசாமியிடம் ஏன் இவ்வாறு பொதுவரப்பினை அழித்து உழுகுகிறீர்கள் என்று கேட்டதற்கு எதிரி ஆரோக்கியசாமி என்னைப்பார்த்து எதுடா உன் வீட்டு இடம், புண்டாமகனே அந்த மகனே, இந்த மகனே என அசிங்கமாக பேசி என்னை கையால் தள்ளினார். அப்போது எதிரி இன்னாசிபாஸ்கர் என்னை பிடித்துக்கொண்டார். எதிரி ஆரோக்கியசாமி கட்டையால் எனது இடது தொடையிலும் எதிரி ஆரோக்கியமேரி களைக்கொத்தி கட்டையால் எனது தலையின் முன்பகுதியிலும் என்னை அடித்தார்கள். அதில் எனக்கு காயம் ஏற்பட்டது. இதுசம்மந்தமாக நான் வடகாடு காவல்நிலையம் சென்று எதிரிகள் மீது அன்றையதினமே புகார் கொடுத்தேன்.

(ஆவணங்கள் குறியீடு செய்வதற்காக முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.)